சார்பு நீதிமன்றம், துறையூர்.
OS.No.99/2022

தேதி: 26.02.2024

பெயர் : (பி.சா.1) அன்புசெல்வி க/பெ: அன்பழகன்

**குறுக்குவிசாரணை**

1. என் தாத்தா மாரிமுத்து இறந்த இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கி நீதிமன்றத்தில் போடவில்லை என்றால் போடவில்லை, என் வக்கீலிடம் கொடுத்துள்ளேன். மாரியாயி , அம்மாவாசை ஆகியோரின் இறப்பு சான்று, வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முத்துசாமிக்கும் இறப்பு சான்று, வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள திருமயில் என்பவரின் இறப்பு சான்று, வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழனியாண்டி மனைவி பூங்கோதைக்கு சொத்துக்கள் இருந்தது, அதைசேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் பூங்கோதைக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் என் பெரியப்பா பழனியாண்டி வாங்கி பூங்கோதைக்கு எழுதி வைத்தார். எந்தஎந்த சொத்து பூங்கோதை சொத்து என்று என் எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. யார் யாருக்கு இடையில் சொத்து பாகம் ஆகிவிட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் இடையே பாகம் ஏற்பட்டது.

2. என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் இடையே பாகம் ஏற்படும் போது என் அத்தை மாரியாயிக்கு சொத்து கொடுத்தார்களா என்றால் என் அத்தை இறந்துவிட்டார். அந்த பாகத்தில் மாரியாயின் வாரிசுகளுக்கு பாகம் கொடுத்தார்களா என்றால் இல்லை. இன்றைய வரை என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் சொல்லிய 9 நபர்களும் என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் இடையே பாகம் ஆன சொத்துக்களில் பாகம் வேண்டி ஒரு நாளும் கேட்கவில்லை என்றால் இ்ல்லை. மாரிமுத்து இறந்தபிறகு சொத்தை என் அப்பாவும், பெரியப்பாவும் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆமாம். என் அப்பாவும் பெரியப்பாவும் பிரிவினை செய்து

கொண்டதற்கு ஆவணம் ஏதும் ஏற்படுத்தினார்களா என்றால் பார்த்தால் தான் தெரியும். இன்றைய நிலைமையில் வழக்கு சொத்தில் எந்தெந்த சொத்து என் அப்பா சொத்து என்றும், என் பெரியப்பா சொத்து என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். என் அப்பா இறந்து 47 வருடங்கள் ஆகிறது . என் பெரியப்பாவிற்கு வாரிசு இல்லை. என் அப்பா ஆசிரியராக இருந்தார். என் அப்பா இறந்தபோது நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்ததால் குடும்பத்தை நிர்வாகம் செய்தது என் பெரியப்பாதான். என் அப்பாவிற்கு பிரிந்ததாக சொல்லும் சொத்தையும் என் பெரியப்பாதான் உழுது சாகுபடி செய்தார் என்றால் ஆமாம். அதனால் தான் எந்தெந்த சொத்து என் அப்பா சொத்து, என் பெரியப்பா என்று சொல்லமுடியாது என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 10 வது பாராவில் 5 ல் 4 பங்கு எங்களுக்கு என்று சொல்லியிருக்கிறேன், மீதி 5 ல் ஒரு பங்கு செந்தில்வடிவுக்கு என்றால் ஆமாம்,ஆனால் சொத்து தரமுடியாது என்று சொல்கிறோம். சமரசம் பேசினோம் என்று சொல்லியிருக்கிறேன் என்ன பேசினோம் என்றால் பேசும்போதே தகராறு ஏற்பட்டது. பஞ்சாயத்து பேசுவதற்கு முன்பே பிரச்சனை வந்துவிட்டது. என் சகோதரர் தமிழ்செல்வன் சேனப்பநல்லூர் அரசு மேல் நிலைப்பள்ளியில் கிளார்க் வேலை செய்தார் என்றால் சரிதான். அரசு பணியில் இருந்ததால் கருணை தொகை கொடுப்பார்கள், அதோடு நீ போ சொத்தை நாங்கள் வைத்து கொள்கிறோம் என்றால் ஆமாம். அரசு தொகையில் உங்களுக்கு உண்டான தொகையை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் அதேபோல் சொத்தில் உள்ள பாகத்தை எனக்கு கொடுத்துவிடுங்கள் என்று சொன்னதால் தான் பிரச்சனை. அரசு தொகையை கேட்டு என் அம்மாவும கொடுக்கவில்லை, வாதியும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். 10 பவுன் செந்தில்வடிவு நகையை தமிழ்செல்வன் அடகு வைத்தார் என்றால் சரிதான். அந்த நகை திருப்ப பட்டதா என்றால் தெரியாது. வாதி எந்தெந்த சொத்தில் பாகம் கிடைக்குமோ அந்தந்த சொத்துக்கு மட்டும் தான் வழக்கு போட்டுள்ளார்ள ன்றால் சரியல்ல. என் பெரியப்பா பழனியாண்டி சாந்திக்கும் அருள்மொழிகடும் பத்திரம் எழுதி வைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் 3,4 ம் பிரதிவாதியும் தொகை கொடுத்து தான் கிரையம் வாங்கினார்கள். நான் தொகை கொடுத்து எந்த நிலமும்

கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். என் பெரியப்பா பழனியாண்டி குடும்ப செலவுக்காக குடும்ப சொததை விற்றார். சொத்தை விற்கும் போது தமிழ்செல்வன் உயிரோடு தான் இருந்தார். தமிழ்செல்வனிடம் சொத்தை விற்பது பற்றி ஆலோசனை செய்தாரா என்றால் கேட்டுதான் விற்றார். மேற்கண்ட விசயத்தை என் எதிர்வழக்குரையில் சொன்னேனா என்றால் இல்லை. வருடம் 2 போகம் நன்செய் சாகுபடி செய்வோம். செலவு போக நிகர தொகை அவரிடம் இருந்தது என்றும் அவர் விற்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்/—எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.